பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 08 புதன்கிழமை 24.09.2025 கதிர் 318

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையில் நேற்று கொழும்பில் உள்ள இந்திய ☞ 2

## கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை இயக்கத் தேவையான திட்டங்கள் தயாரிப்பு

### சுகாதார அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

பல வருடங்களாக இயங்காமல் இருக்கும் கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை மீள இயங்க செய்வதற்கு தேவையானநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருவதாகவும், அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையின்போது ஆளும் கட்சி உறுப்பினர் ரஜீவனால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்ரஜீவன்எழுப்பிய கேள்வியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சிமாவட்டத்தில்நெதர்லாந்து ☞ 6

## இன்று ஜெனிவா செல்கிறார் நீதி அமைச்சர் நாணயக்கார

### காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் குறித்துப் பேச

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் மீளாய்வு அமர்வில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார பங்கேற்கவுள்ளார். அதற்காக அவர் இன்றுபுதன்கிழமைஜெனீவாசெல்கிறார்.

ஒக்டோபர் 2 வரை இடம்பெறவுள்ள இந்த மீளாய்வில் இலங்கை தொடர்பான இரண்டு பொது மீளாய்வு அமர்வுகள் செப்டெம்பர் 26 இடம்பெறவுள்ளன. இதில் பங்கேற்பதற்காக நீதி அமைச்சர் தலைமையிலான சிறப்பு குழுவில் பிரதி அமைச்சர் முனீர் மௌலவி, நீதி அமைச்சின் அதிகாரிகள் சிலர் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

# தமிழ் மக்கள் நம்பவைத்து ஏமாற்றிவிட்டது என்.பி.பி.

### நாடாளுமன்றில் சாணக்கியன் இடித்துரைப்பு

நிறைவேற்று அதிகாரமிக்க அரசுத் தலைவர் முறைமை நீக்கம், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆளும்தரப்பு வழங்கிய வாக்குறுதிகள் வெறும் கானல் நீராகியுள்ளது. அரசுத் தலைவரின்பதவிக்காலத்தில்ஒருவருடம்நிறைவடைந்துள்ள நிலையில்தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் கிடைக்கவில்லை. தமிழ் மக்களை நம்பவைத்துஏமாற்றிவிட்டதுஎன்.பி.பி.ஆளும்தரப்புஎன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ☞ 2

## மமதையை விட்டுவிட்டு ஆளும்தரப்பினர் முழுமையான தீர்வுக்கு முன்வரவேண்டும்

### முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் வலியுறுத்து



தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு ஆளும்தரப்பு முன்வர வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009 இறுதிப் போரில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்பு 16 ஆண்டுகளாக நீதிக்காக தமிழினம் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், தமிழர் தரப்பிலேயே பலரையும் குழப்பும் விதத்தில் சிலரின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

சர்வதேசம் எதையுமே செய்யாது என்றவிசமப்பரப்புரையின்மூலம் ☞ 2

## தமிழ் மக்களுக்கு நீதி கேட்டு 5 நாள் பட்டினிப் போராட்டம்

### காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அறிவிப்பு




தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்டு செப்டெம்பர் 25 தொடக்கம் 29 வரை அடையாள சுழற்சி முறைப் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த சங்கத்தின்பிரதிநிதிகள்இதனைத் தெரிவித்தனர். அவர்கள்மேலும் தெரிவித்ததாவது:

செம்மணி வளைவுப் பகுதியில் இந்தப் பட்டினிப் போராட்டம் இடம்பெறவுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எமது உறவுகள் அங்கு வருகை தந்து ஒன்றிணையவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

செப்டெம்பர் 25 காலை 9 மணி முதல் போராட்டம் தொடங்கும். இரவு பகலாகத் தொடர்ச்சியாக செப்டெம்பர் 29 மாலை 4 மணி வரை நடைபெறும்.

தமிழ் மக்கள் அனைவரும் இந்தப் ☞ 2

## முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியசாலைக்கு 4 மாடிக் கட்டடம் அமைக்க இந்தியாவுடன் உடன்படிக்கை

முல்லைத்தீவுமாவட்டவைத்தியசாலையில் ஆண் மற்றும் பெண் நோயாளர்களுக்காக இந்திய உதவியில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்கு மாடி விடுதிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர் விடுதிக்கான நிரந்தர கட்டடம் இல்லாமைதொடர்பில்எழுப்பியகேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவுமாவட்டவைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர்களுக்கான தற்காலிக விடுதி இயங்கி வருகின்றது. இந்நிலையில் அங்கே இந்தியாவின் உதவித் திட்டத்தின் கீழ் நான்கு மாடி விடுதி கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அந்தத் திட்டத்தை செயற்படுத்த அனுமதி வழங்கப்பட்டள்ளதுடன், இதுதொடர்பானஇருதரப்புஉடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது. ☞ 3

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணையை நிராகரித்த காரணங்களை நாடாளுமன்றிற்கு அறிவிக்குக

### எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

அருண ஜயசேகர பிரதி அமைச்சர் தொடர்பில் எமக்கு தனிப்பட்ட ☞ 2

## இனி இது .....

உயராணையர் இல்லத்தில் ஒரு சந்திப்பு நடந்தது. ஏற்கனவே இரு தடவைகள் திட்டமிடப்பட்டுஒத்திவைக்கப்பட்டவழக்கமான சந்திப்புத்தான் இது. இருந்தாலும் சந்திப்புத் தொடங்கியபோது 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அங்கிருந்தார்கள்.

தமிழ் அரசுக் கட்சிக்கு மொத்தம் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களில் அம்பாறையைச் சேர்ந்த கோடீஸ்வரன் வெளிநாடு சென்றிருந்தார். விபத்தில் சிக்கிக் காயமடைந்த சிறீநேசன் ஓய்வெடுத்து வருகிறார். இதனால் இருவரும் சந்திப்பிற்கு வரவில்லை. நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் 10 நிமிடங்கள் தாமதமாக வந்தார். முல்லைத்தீவைச் சேர்ந்த ரவிகரன் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த குகதாசன் ஆகியோர் 25 நிமிடங்கள் தாமதமாக வந்தனர். தாம் இருவரும் சந்திப்பு இந்திய உயராணையரகத்தில் நடப்பதாக நினைத்து அங்கு சென்றுவிட்டுத் திரும்பி வந்ததால் தாமதமாகி விட்டது என்று காரணம் தெரிவித்தனர்.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் தாமதமாக வந்தாலும் சந்திப்பு உரிய நேரத்தில் தொடங்கியது. அமர்ந்திருந்த மூவரில் சாணக்கியனே முன்வந்து தமிழ் அரசுக் கட்சி சார்பிலான கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கினார். அவர் வழக்கம் போல மாகாண சபைத் தேர்தல், புதிய அரசமைப்பில் ஆளும்தரப்பு அக்கறையின்றி இருக்கின்றமை போன்ற விடயங்களை எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து பேசிய சிறீநாத், கிழக்கில் சீனாவின் அதிகரித்திருக்கும் ஈடுபாடு குறித்து நீட்டி முழக்கினார். சீனாவின் அதிகரித்த பங்களிப்புப் பற்றிப் பேசுவது இந்தியாவிற்கு விருப்பமானதாக இருக்கக்கூடும் என்று அவர் நினைத்திருக்கக்கூடும். ஆனால், அது உயராணையர் சந்தோஷ் ஜாவை மகிழ்ச்சிப்படுத்தவில்லை.

அவர் அண்மையில்தான் இந்திய - இலங்கை உறவு வரலாற்று உச்சத்தில் உள்ளது என்று தெரிவித்திருந்தார். அத்தோடு அமெரிக்காவுடனான வரிப் பிணக்குக் காரணமாக இந்தியா சீனாவோடு நெருங்கிச் சென்று ரஷ்ய - இந்திய - சீன கூட்டணியை அமைப்பதில் ஆர்வம் காட்டும் நிலையில் பூகோள நகர்வுகளுக்கு மத்தியில் சிறீநாத்தின் கருத்துக்கள் உயராணையரை மகிழ்ச்சிப்படுத்தவில்லை என்பது அவரது கருத்துக்களில்வெளிப்படையாகவேதெரிந்தது.

சீனா செய்கிறது என்பதற்காக ஏட்டிக்குப் போட்டியாக இந்தியா தலையிடாது, அது எங்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. வடக்கு கிழக்குதமிழர்களின்அபிவிருத்திக்குஉதவுவது என்பது இந்திய அரசின் கொள்கை, அதன்படி செயற்படுவோம் என்றார் சந்தோஷ் ஜா.

அதாவது தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளில் பூகோள அரசியலை வளைத்து தமிழர்கள் மாயாஜாலம் காட்டமுடியும்என்றுஎழுதுவதைப்போன்றல்ல விடயங்கள், இந்தியாவிற்கு கொழும்பும் பீஜிங்கும் தமிழர்களைவிடவும் முக்கியம், உங்களுக்கு (தமிழர்களுக்கு) ஏதாவது உதவி தேவை என்றால் மட்டும் டில்லியிடம் கையேந்துங்கள் என்ற தொணியே சந்தோஷ் ஜாவின் பதிலில் தொணித்தது என்று சொல்லப்பட்டது.

தாமதமாக வந்த சிறீதரனின் கருத்துக்கள் சந்தோஷ் ஜாவிற்கு மகிழ்ச்சி தந்திருக்கலாம். ஏனெனில், அவர் தனது சொந்தக் கட்சியின் செயற்பாடுகளிலேயே தவறுகள் இருந்தன என்று குறிப்பிட்டார். அதிலும் சம்மந்தனின் காலத்தில் இந்தியா அதிருப்தியடைந்திருந்த அவரது நகர்வுகளை எல்லாம் தவறு என்று சாரப்பட சிறீதரன் கருத்துத் தெரிவித்தார். குறிப்பாக நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் தமிழ் அரசுக் கட்சி நடந்துகொண்ட விதம் தவறு என்பது உரையின் சாரமாக இருந்தது. அந்தக் காலப் பகுதியில் இந்தியாவோடு சேர்ந்து தமது கட்சி செயற்படவில்லை என்பதையும் அவர் இடித்துரைக்கத் தவறவில்லை. உயராணையருக்கு இது மகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஏனெனில் தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவிற்கு அடிமைச் சேவகம் செய்வதை மட்டுமே புதுடில்லி எதிர்பார்க்கிறது. தமிழர்களின் உரிமை, மக்களின் நலன்கள் என்ற பெயரில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் செயற்படக்கூடாது என்பதே அவற்றின் எதிர்பார்ப்பு. அதாவது மன்னாரில் அதானியின் காற்றாலைத் திட்டத்தை எதிர்ப்பது போன்ற விடயங்களை புதுடில்லி விரும்பவில்லை. அந்தத் தோரணை நேற்றைய கூட்டத்திலும் பிரதிபலித்தது.

சம்மந்தன் காலத்தில் அவரது சார்பில் விடயங்களை முக்கியமாகக் கையாண்டவர் சுமந்திரன். போர்க் குற்றங்கள் தொடர்பில் மேற்கு நாடுகளுடன் சேர்ந்துகொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது உள்ளிட்ட பல விடயங்களில் இந்தியாவிற்கு அதிருப்தி இருக்கின்றது. எனவே தனது கட்சியை இந்த விடயங்களில் குறைகூறுவது இந்தியாவை மகிழ்விக்கும் என்று சிறீதரன் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அதனால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

மாகாண சபைத் தேர்தல் விடயத்தில்கூட இன்றைய நிலைக்குத் தனது கட்சியுமே காரணம் என்பதும் சிறீதரன் சுட்டிக்காட்டிய தனதுகட்சிமீதானதவறுகளில்ஒன்று. மாகாண சபைக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்திற்கும் அப்போது வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டு இப்போது அதைத் தவறு என்று சொல்லப் புறப்பட்டிருக்கிறார் சிறீதரன். முன்னர் இதேவேலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ரெலோவும் புளொட்டும் செய்து வந்தன. சம்பந்தனுடன் கூட்டத்தில் தலையாட்டிவிட்டு வந்து, வெளியே அதனை விமர்சிப்பதைவழக்கமாகக்கொண்டிருந்தனர். இப்போது தமிழ் அரசுக் கட்சிக்குள் அந்தப் பணியை சிறீதரன் பொறுப்பெடுத்திருக்கிறார் போலும் என்பதுதான் இந்தச் சந்திப்பில் வெளிப்படையாகிய ஒரே உருப்படியான அம்சம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் நடப்பதையொட்டிய விடயமும் மேலோட்டமாக அங்கு பேசப்பட்டது என்பதற்கு மேல் இந்தச் சந்திப்பு வேறு பிரதான அம்சங்கள்எதனையும்கொண்டிருக்கவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு ஒருவருடத்தை பூர்த்தி செய்துள்ளது. .இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும்அடிப்படைபிரச்சினைகளுக்கு அரசுத்தலைவர் அநுரகுமார இந்த ஒருவருட காலத்தில்தீர்வினைபெற்றுக்கொடுக்கவில்லை. திருப்தியடையும்ஒருதீர்வைக்கூடஆளும்தரப்பு முன்வைக்கவில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

அரசுத் தலைவரின் பதவிக் காலத்தில் ஒருவருடம் நிறைவடையும்போது, இதுவரை என்ன செய்தீர்கள் என்று எவரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதற்காகவே இம்மாதம் முதல் வாரத்தில் வடக்கு மற்றும் ஏனைய மாகாணங்களில் அவசர அவசரமாக அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவமானப்படக்கூடாது என்பதற்காகவே அவசரமாக ஒருசில அபிவிருத்திகள் தொடங்கப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு வழங்குவதற்கு ஆளும்தரப்பு தொடக்ககட்ட நடவடிக்கைகளைக்கூட மேற்கொள்ளவில்லை. காணி விடுவிப்பு பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாக ஆளும்தரப்பு குறிப்பிட்டது. ஆனால் இதுவரையில் அந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிமற்றும்மேய்ச்சல்தரைபிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு இந்த ஆளும்தரப்பு எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை. அத்துமீறிய மேய்ச்சல்காரர்கள் எமது மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ளார்கள். இந்தப் பிரச்சினைக்குவர்த்தமானிஅறிவித்தல்ஊடாக தீர்வு காணுமாறு தொடர்ந்து கோரிக்கை விடுக்கிறோம்.

இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணிகளை விடுவிப்பதாக வாயால் குறிப்பிடப் படுகிறது. ஆனால் செயலில் ஒன்றுமில்லை. வனவளத்துறை திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதாக சுற்றாடல் துறை அமைச்சர் வடக்குக்கு வந்து குறிப்பிட்டார். மூன்று மாதங்கள் கடந்தும் ஏதும் நடக்கவில்லை.

எமது மக்கள் கடந்த காலங்களில் மனித உரிமை மீறல் கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இதற்கு இந்த ஆளும்தரப்பு வழங்கிய பதிலை எம்மால் ஏற்க முடியாது. யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள மைதானக் காணியில் இருந்து ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. செம்மணி விவகாரத்தில் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மாகாண சபைத் தேர்தலை இந்தாண்டு நடத்துவதாக அரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் குறிப்பிட்டார்கள். தற்போது 2026 என்று குறிப்பிடுகிறார்கள். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய சட்டமூலத்தைவிரைவாகநிறைவேற்றஎவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நிறைவேற்று அதிகாரமிக்க அரசுத் தலைவர் முறைமை நீக்கம், புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி எவ்வித பேச்சும் எடுக்கப்படவில்லை. எமது மக்கள் கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த கால ஆட்சியாளர்கள் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது என்று வெளிப்படையாகவே குறிப்பிட்டார்கள். ஆனால்நீங்கள்நம்பவைத்து ஏமாற்றியுள்ளீர்கள். இதனை தொடர்ச்சியாக ஏற்க முடியாது என்றார்.

## நம்பிக்கையில்லா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தப் பிரச்சினைகளும் இல்லை. அவர் தற்போது பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்து வருகிறார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டு வந்ததன் பிற்பாடு, அதனை நிராகரிப்பதற்கு அடிப்படையாக இருந்த செயலாளர்கள் குழாமின் அறிக்கைகள் மற்றும் சட்டமா அதிபரின் அறிக்கை உள்ளிட்ட ஏனைய விடயங்களை இந்த சபைக்கு சமர்ப்பிக்குமாறு சபாநாயகரை கேட்டுக்கொள்கிறேன்,

அவ்வாறே, பாதிக்கப்பட்டவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணையை வேண்டி நின்றாலும், அது அவ்வாறு நடக்காமையினால், ஜெனீவாவில் தற்போது நடந்து வரும் கலந்துரையாடலில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சங்கிரில்லா சொகுசு விடுதியில் உயிரிழந்த விஹன தேஜானின் தந்தை சுராஜ் நிலங்க, நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் இணைந்துகொண்டு, இலங்கையில்நடந்துவரும்உயிர்த்தஞாயிறு விசாரணை தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற விடயங்கள் நாட்டிற்கு நல்லதில்லை என்பதால், இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி நிலை நாட்டப்படுவதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அதனை ஆளும்தரப்பு செய்ய வேண்டும் என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் பங்கேற்கவேண்டும். இதனை ஒரு பொது அழைப்பாகக் கருதி அனைவரும் பங்கேற்று போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது கூட்டத்தொடரில் செப்டெம்பர் 22 தொடக்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்தக் கூடட்டத்தில் எமக்காக எமது உறவுகளுக்காக நிரந்தரத் தீர்வு கிடைக்கவேண்டும். இதுவரை காலமும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே எமக்கான நீதியினை வழங்குவதற்கு அனைத்து நாடுகளும் தங்களது பூகோள அரசியலைத் தவிர்த்து முன்வரவேண்டும். ஏனைய நாடுகள் மற்றும் அனுசரணை வழங்கும் நாடுகளிடமும் நாம் இந்தக் கோரிக்கையை விடுக்கிறோம்.

தமிழ் மக்களுக்கு நிகழ்ந்தது இனப்படு கொலைஎன்பதைநாம்இங்கேஈழத்தில்வாழும் தமிழர்களாகத் தெரிவித்துக்கொள்கிறோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேசநீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றனர்.

## வைத்தியசாலைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் அவசர சிகிச்சைப் பிரிவை இந்தியஉதவித்திட்டத்தில்நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டுள்ளதுடன், அடுத்ததாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். அயலுறவுத்துறை அமைச்சு மற்றும் சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்த பின்னர் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தலைமையிலான குழு கடந்த வாரம் ஜெனிவா சென்று, இலங்கையின் நிலைப்பாட்டை அறிவித்ததன் பின்னர் நாடு திரும்பியுள்ள நிலையில், நீதி அமைச்சின் சிறப்புக் குழு மீண்டும் ஜெனிவா செல்கிறது.

இவ்வாறானதொரு நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க்கின்அறிக்கையும்சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசு அண்மையில் அளித்த வாக்குறுதிகளை அவர் அங்கீகரித்தாலும், அவைவெறும்வார்த்தைகளாகநின்றுவிடாமல், உறுதியானநடவடிக்கைகளாகமாறவேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு உருவாக்கிய காயங்களை ஆற்றுவதற்கு இலங்கை அரசுக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்வதன் மூலம் நல்லிணக்கத்திற்கான ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்க முடியும் என்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## மமதையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

நான் 15 தடவைக்கு மேல் ஜெனிவா கூட்டத்தொடருக்குச் சென்றவன் என்ற அடிப்படையில், நாட்டிலிருந்து கோரிக்கை வரவேண்டும். உள் நாட்டு மக்கள் போதிய அளவு அக்கறை காட்டாவில்லை. புலம்பெயர் நாடுகளில் இருந்து வரும் அழுத்தம் மட்டும் போதாது என்ற கருத்துப்பட சொல்லி இருந்தார்கள்.

நடைபெற்றது இனப்படுகொலைதான் என்று சொல்வதற்கு போர் முடிவடைந்து ஏறக்குறைய 7 ஆண்டுகள் எடுத்தன. 2009இல் போர் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்தே பின்னரே 3 தரப்புக்கள் இணைந்து இனப்படுகொலை எனக் கையெழுத்திட்டு ஐநாவுக்கு கடிதம் அனுப்பின.

2015இல் வடக்கு மாகாண சபை இனப் படுகொலை தீர்மானத்தை நிறைவேற் றியபோதும்கூடதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் வடக்கு மாகாண சபை இருந்தபோதும் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையே இருந்தது.

இனப்படுகொலையை நிரூபிக்க முடியாது எனச்சொன்னவர்கள்தற்போதுசெம்மணிக்குப் பிறகு, இனப்படுகொலை நிருபிக்கப்படலாம் என்ற கருத்தை எங்கள் தரப்பில் இருந்து சொல்கிறார்கள்.

நாங்கள் போராடுவதால் அழுத்தம் கொடுப்பதால் எதுவும் ஆகாது என்று இல்லை. எங்களுக்கு அதிர்ஷ்டம் இருப்பதுபோல செம்மணி மனித புதைகுழி தோண்டும்போது இருநூறுக்கும்மேற்பட்டமனிதஎலும்புக்கூடுகள் இன்று வெளிவந்துள்ளன. இதைக் குழப்புவதற்குப் பலர் செயற்பட்டாலும் நாங்கள் அதனை வெளிப்படுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

இனிமேல் இனப்படுகொலை நடைபெறாது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ரோம் உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திடவேண்டும் என்ற கோரிக்கையைக் கொழும்பு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வடக்கு கிழக்கு பிராந்தியங்களை ஏற்று ஜநாவின்பொறிமுறைஊடாகஎமக்கானபரிகார நீதி வழங்கப்படவேண்டும். சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமக்கு தீர்வு வருவதற்கான வாய்ப்புகள் பெரியளவில் காணப்படுகின்றன.

எங்கள் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு ஆளும்தரப்பு முன்வர வேண்டும். பன்னாட்டுச் சமூகத்திடம் நீதியை கேட்கவும் தொடர்ந்து போராடவும் தமிழ் மக்கள் தொடர்ந்து பயணிக்க வேண்டும் - என்றார்.

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை சரியானது என்பதை இப்போதாவது ஏற்கிறீர்களா?

## சபாநாயகரிடம் கயந்த கருணாதிலக்க எம்.பி. கேள்வி

பிரதி அமைச்சர்களுக்கு விடயதானத்தின் ஊடாக அதிகாரம் மற்றும் தத்துவங்கள் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை புறக்கணித்தீர்கள். ஆனால் இவர் தற்போது பாதுகாப்பு பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆகவே நாங்கள் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை சரியானது என்பதை தற்போதாவது ஏற்றுக்கொள்வீர்களா? என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார அரசமுறைப் பயணமாக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். அரசுத் தலைவர் வசமுள்ள மூன்று அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரசுத் தலைவர் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 2(அ) பிரிவில் 'அமைச்சர் ஒருவர் ஆளும்தரப்பின் ஏதேனும் கடமை அல்லது கருமத்தை ஆற்றும்போது அவருக்கு அரசுத் தலைவரால் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கருதப்படும் வகையில் குறித்தநபர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கருதப்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசுத் தலைவரின் வெளிநாட்டுப் பயணத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அருண ஜயசேகரவுக்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தபோது பிரதி அமைச்சர்களுக்கு விடயதானத்தின் ஊடாக அதிகாரம் மற்றும் தத்துவங்கள் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு நீங்கள் (சபாநாயகர்) நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் புறக்கணித்தீர்கள்.

தனிப்பட்ட காரணிகளை அடிப்படையாகக்கொண்டு பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவில்லை. உண்மை நோக்கத்துடனே செயற்பட்டோம். இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சரியானது என்பதை தற்போதாவது ஏற்றுக்கொள்வீர்களா என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு, சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, இவ்விடயம் குறித்து நான் கடந்த நாடாளுமன்ற அலுவல்கள் கூட்டத்தின் பின்னர் உங்களுக்குத் தெளிவுப்படுத்தினேன். எதிர்வரும் நாட்களில் பேசலாம். இவ்விடயம் குறித்து விரிவாக தெளிவுப்படுத்த வேண்டியுள்ளது என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமாச பிரதி அமைச்சர் அருண ஜயசேகர மீது எமக்கு தனிப்பிட்ட பிரச்சினைகள் ஏதுமில்லை. பதில் பாதுகாப்பு அமைச்சராக இன்று (நேற்று) நியமிக்கப்பட்டுள்ளார். நம்பிக்கையில்லாப்பிரேரணையைபுறக்கணிப்பதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்களை சபையில் வெளிப்படுத்துங்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மற்றும் நியாயத்தைக் கோருகிறார்கள்.

சங்கரில்லா ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த வியங்க தேஜான் என்ற இளைஞனின் தந்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிகழ்நிலை முறைமை ஊடாக கலந்துக்கொண்டு தமக்கு நீதி கிடைக்கவில்லை. குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து தாம் திருப்தியடையவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது நாட்டுக்கு நல்லதல்ல, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் விசாரணைகள் முறையாக இடம்பெறவேண்டும். மக்கள் நம்பிக்கை பெற வேண்டும். நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் அலுவலகம் வழங்கிய அறிக்கையை சபைக்குச் சமர்ப்பியுங்கள் என்று வலியுறுத்தினார்.

# இந்தியக் கடற்படையின் பிரதானி கடற்படைத் தளபதியுடந் சந்திப்பு

*உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய கடற்படை அதிகாரிகளின் பிரதானி அத்மிரால் தினேஷ் கே திரிபாதி, கடற்படைத் தலைமையகத்தில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கான்சன பனாகொடவை சந்துள்ளார்.*

*பிரதானி அத்மிரால் தினேஷ் கே திரிபாதி உள்ளிட்ட இந்திய கடற்படை அதிகாரிகள் பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில், கடற்படை பயிற்சி பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தம்மிக விஜேவர்தனவால் வரவேற்கப்பட்டார்.அட்மிரல் தினேஷ் கே திரிபாதிக்கு கடற்படையின் சம்பிரதாய மரியாதை செலுத்தப்பட்டது.*

*இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது கடல்சார் பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு தொடர்பான மூலோபாய மற்றும் இருதரப்புத் தேவைகள் குறித்து ஒரு சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த உத்தியோகபூர்வ சந்திப்பைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுகளும் பரிமாறப்பட்டன.*



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணாமலாக்கப்பட்டோரின் நீதி; காலம் தாழ்த்தப்படும் வாக்குறுதிகள்

**இலங்கையின் உள்நாட்டுப் போரின் முழந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அதனுடன் தொடர்புடைய மிகக் கடுமையான மனிதாபிமானப் பிரச்சினைகளில் ஒன்று—வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம். அதற்கு இன்னும் தீர்வு காணப்படாமல் உள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், தமது அன்புக்குரியவர்கள் எங்கே? உயிருடன் உள்ளார்களா? உயிரிழந்துவிட்டார்களா? என்ற கேள்விக்குப் பதில் தேழக் கொண்டிருக்கின்றனர். பல வருடங்களாக நீதி கேட்டு வீதியிலிருந்து போராடி வருகின்றனர். தவிர, பல்வேறு போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில், புரட்டாதி 22 முதல் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை ஆராயப்பட்டு வருகின்றது. புரட்டாதி 26 இலங்கை விவகாரம் ஆராயப்படவுள்ளது. அதற்காக இலங்கை நீதி அமைச்சர் ஜெனீவா சென்றிருக்கிறார். இந்நிலையில், தமிழ் மக்களின் கவலைகள், கோரிக்கைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் மீண்டும் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன.**

**இலங்கை அரசுகள் கடந்த காலத்தில் பலமுறை காணாமலாக்கப்பட்டோர் குறித்த விசாரணைகளுக்கு வாக்குறுதி அளித்திருந்தாலும், அவற்றின் விளைவுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. 'காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம்' (Office of Missing Persons) எனும் அமைப்பு சில ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டாலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதில் நம்பிக்கையை வைக்க முடியவில்லை. காரணம்—அந்த அலுவலகம் உண்மையான நீதியை வழங்கும் அதிகாரம் பெற்றதல்ல, மாறாக காலம் தாழ்த்தும் கருவியாகவே செயல்படுகிறது என்பதே பொதுமக்களின் பார்வை.**

**இலங்கையில் காணாமலாக்கப்பட்டோரின் எண்ணிக்கை பற்றியும் துல்லியமான புள்ளிவிவரங்கள் இல்லை. சில அமைப்புகள், 60,000க்கும் அதிகமானோர் கடந்த சில தசாப்தங்களில் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றன. அவர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆயிரக்கணக்கானோர் போரின் இறுதி நாட்களில் இலங்கைப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பே காணாமல் போனவர்கள். இதற்கான சாட்சிகள், புகைப்படங்கள், சான்றுகள் அனைத்தும் வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளின் கையிலேயே உள்ளன.**

**இந்நிலையிலும், அரசு விசாரணை நடத்தத் தயங்குவது, அல்லது நீதியைக் காலம் தாழ்த்துவது, மக்கள் மனங்களில் நம்பிக்கையின்மையை வலுப்படுத்தியுள்ளது. அதனால்தான், தமிழ் மக்கள் தமது நீதிக் கோரிக்கையை சர்வதேச மேடைகளில் மீண்டும் மீண்டும் முன்வைக்கின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், பலமுறை இலங்கையிடம் துல்லியமான நடவழக்கைகள் எடுக்க வலியுறுத்தியுள்ளது.**

**இங்கு முக்கியமான கேள்வி என்னவெனில் — நீதியை யார் வழங்கப் போகின்றனர்? அரசு உண்மையிலேயே தன்னிச்சையாக விசாரணை நடத்துமா? இல்லையெனில், சர்வதேச சமூகமே முன்னெடுப்புகாட்ட வேண்டியதா? என்ற நிலைப்பாடுதான். உண்மையில், உள்நாட்டு செயல்முறைகள் பலமுறை தோல்வியுற்றுள்ளன. அதனால்தான், தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையே ஒரே வழி என்று வலியுறுத்துகின்றனர். இப்போது சுயாதீனமான வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒன்றை அமைக்கப் போவதாகத் தெரிவித்து இந்த விடயத்தில் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றி மேலும் கால அவகாசத்தைப் பெறுவதற்கு அநுர ஆட்சி முயற்சிக்கின்றது.**

**காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை ஒரு அரசியல் விவாதம் மட்டுமல்ல. அது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் தினசரி வலியும் துயரமும் ஆகும். ஒவ்வொரு நாளும், தமது குழந்தையின், கணவனின், சகோதரனின் புகைப்படத்தை கையில் ஏந்தி போராட்டம் நடத்தும் தாய்மார்களின் குரலே இதற்குச் சாட்சியாக இருக்கிறது. இந்தக் குரல்கள், இலங்கையின் மனித உரிமை வரலாற்றில் அழிக்க முடியாத சின்னங்களாகவே நிலைத்து நிற்கும்.**

**புரட்டாதி 26 நடைபெறவுள்ள பேரவை அமர்வு, இலங்கை அரசுக்கு ஒரு சோதனைக்கல்லாகும். கடந்த கால வாக்குறுதிகளை மீண்டும் கூறி காலம் தாழ்த்துவது போதாது. மாறாக, உண்மையான விசாரணை, சாட்சிகள் பாதுகாப்பு, குற்றவாளிகள் மீது நடவழக்கை, பாதிக்கப்பட்டோருக்கான நஷ்டஈடு ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது இலங்கைக்குள் நீதியாக நடக்கும் என்று தமிழர்கள் நம்பாததன் காரணமாக பன்னாட்டு விசாரணை ஒன்றுக்கு ஆளும்தரப்பு ஒத்துழைக்கவேண்டும். ஏற்கனவே ஐ.நா. தீர்மானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களையாவது நிறைவேற்ற அது முன்வரவேண்டும்.**

**காணாமலாக்கப்பட்டோரின் நீதியை மறுக்கும் ஒவ்வொரு நாளும், இலங்கை மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு கறை சேர்த்துக் கொண்டே செல்கிறது. உண்மை, நீதி, பொறுப்பு ஆகியவை இல்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை.**

**சர்வதேச சமூகமும், குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், இந்த உண்மையை உணர்ந்து, தாமதமின்றி வலுவான நடவழக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது.**

# அரச பயன்பாட்டிலுள்ள வாகனங்கள் புகைப் பரிசோதனை செய்கின்றனவா?

### நாடாளுமன்றில் காதர் மஸ்தான் எழுப்பிய கேள்வி

அரச திணைக்கள வாகனங்கள் வீதியில் செல்லும் போது வெளியிடும் மிகையான புகை காரணமாக சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதுடன். சுவாச நோய்களுக்கும் உட்படுகின்றனர். அதனால் அரச வாகனங்களில், பொதுப் போக்குவரத்து சேவைகள் பயன்படுத்தும் வாகனங்களில் எத்தனை வாகனங்கள் 2024 ஆம் ஆண்டில் புகை வெளியேற்ற சான்றிதழ் பெற பரிசோதிக்கப்பட்டுள்ளன என கேட்கிறோம் என இலங்கை தொழிலாளர் கட்சி தலைவர் காதர் மஸ்தான் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27 (2)இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

2024 மார்ச் 18 அன்று வெளியிடப்பட்ட ஐரோப்பிய ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, புதிய பயணிகள் கார்கள் மற்றும் வான்களின் காபனீர் ஒக்சைட் வெளியேற்ற உண்மையான அளவுக்கும் வாகன பரிசோதனை சான்றிதழ் அறிக்கைக்குமிடையே பல மடங்கு வித்தியாசம் காணப்படுகிறது, இலங்கையில் நடைமுறையில் உள்ள புகை வெளியேற்ற பரிசோதனை முறைமையானது வெறுமனே வருவாய் ஈட்டும் ஒரு கருவியாக மட்டுமே செயல்படாமல், வளிமண்டல வாயு மாசடைதலை கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த செயற்திட்டமாக அமைய வேண்டும்.

தற்போதைய சூழநிலையில் அரச திணைக்கள வாகனங்கள் வீதியில் செல்லும்போது வெளியிடும் மிகையான புகை காரணமாக பொது மக்கள் குறிப்பாக சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பலசிரமங்களை எதிர்கொள்வதுடன். சுவாச நோய்களுக்கும் உட்படுகின்றனர். அதனால் பின்வரும் கேள்விகளுக்கான பதிலை ஆளும்தரப்பிடம் எதிர்பார்க்கிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் புகை வெளியேற்றப் பரிசோதனையின் கீழ் சோதிக்கப்பட்ட அரச வாகனங்களின் மொத்த எண்ணிக்கையும், இதன் மூலம் கிடைத்த மொத்த வருமானமும், அதில் ஆளும்தரப்பிற்கும் முகவர் நிறுவனங்களுக்கும் கிடைக்கப்பெற்ற வருடாந்த தேறிய வருமானம் என்ன?

2024ஆம் ஆண்டில் புகை வெளியேற்றப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தனியார் மற்றும் அரச வாகனங்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

மொத்த அரச வாகனங்களில், குறிப்பாக இராணுவம், காவல்துறை மற்றும் பொது போக்குவரத்து சேவைகள் பயன்படுத்தும் வாகனங்களில் எத்தனை வாகனங்கள் 2024 ஆம் ஆண்டில் புகை வெளியேற்ற சான்றிதழ் பெற பரிசோதிக்கப்பட்டன?

புகை வெளியேற்றப் பரிசோதனை முறைமை குறித்த மதிப்பீடு மற்றும் ஆய்வு அறிக்கைகள் இருப்பின் அதவற்றில் குறிப்பிடப்பட்ட மேம்படுத்துவதற்கான முக்கிய பரிந்துரைகள் என்ன?

புகை வெளியேற்றப் பரிசோதனை கட்டணத்தை மீள்பரிசோதனை செய்ய இந்த ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளதா? அவ்வாறாயின் புதிய திருத்தக்க கட்டணம் என்ன?

இன்று நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரித்துவரும் சூழ்நிலையில், வாகனங்களின் தரம், வீதியில் ஓடுவதற்கான பொருத்தப்பாடு பற்றி பரிசீலிப்பதற்கான சிறந்ததொரு பொறிமுறையை ஏற்படுத்த முடியுமா?

# 67 ஆயிரம் தொன் சோளமே இறக்குமதி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

### பிரதி அமைச்சர் நாமல் தெரிவிப்பு

3 இலட்சம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது முற்றிலும் பொய்யானது. இந்த ஆண்டு 67 ஆயிரம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டு, தேசிய மட்டத்தில் சோள உற்பத்தியை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்று விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

எதிர்க்கட்சித்தலைவரின் குற்றச்சாட்டுக்களையிட்டு கவலையடைகிறேன். அவர் தெரிந்து இவ்வாறு குறிப்பிடுகிறாரா அல்லது தெரியாமல் குறிப்பிடுகிறாரா என்பதை அறிய முடியவில்லை. தேசிய மட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 3 இலட்சம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. கடந்த ஆண்டு முதற்காலப் பகுதியில் 2 இலட்சத்து 53 ஆயிரம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 67 ஆயிரம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் சோள உற்பத்திகளை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சோளம் உட்பட அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு உரிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மாதமளவில் 13 புதிய பயரினங்களை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# மின்சார சபையினரின் கோரிக்கைகள் சில நியாயமற்றவை, ஏற்றுக்கொள்ள முடியாது

### அமைச்சர் அநுர கருணாதிலக நிராகரிப்பு

இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது, மின்சார சபையின் கட்டமைப்புக்கள் அரச நிறுவனங்களுக்கே வழங்கப்படும். மின்சார சங்கத்தினர் முன்வைத்துள்ள ஒருசில கோரிக்கைகள் நியாயமற்றவை அவற்றை ஏற்க முடியாது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகால ஆட்சியாளர்கள் தமது நலனுக்காகவே ஒருசில சட்டங்களை இயற்றிக்கொண்டார்கள். இந்தச் சட்டங்களால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள இவ்வாறான சட்டங்களை நிச்சயம் நீக்குவோம். மக்களுக்கு பயனுடையதான சட்டங்களை இயற்றுவோம்.

இலங்கை மின்சார சபை சேவையாளர்களின் தொழிற்சங்க போராட்டம் பற்றி மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கடந்த ஆளும்தரப்பு இலங்கை மின்சார சபையை 12 பகுதிகளாக கூறுப்படுத்தி ஊழியர்களை சேவையில் இருந்து விலக்குவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கிய வகையில் சட்டத்தை இயற்றியது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த சட்டத்தைத் திருத்தினோம்.

இலங்கை மின்சார சபையில் பல பிரச்சினைகள் காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக வே மின்சாரசபையை மறுசீரமைக்கதீர்மானிக்கப்பட்டது. மின்சார சபையின் கட்டமைப்பை நான்கு நிறுவனங்களுக்குவழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு நிறுவனங்களும் முழுமையாக அரசுக்குச் சொந்தமானவை.

இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் நோக்கம் ஆளும்தரப்புக்குக் கிடையாது. மின்சார சபையின் கட்டமைப்புக்கள் அரச நிறுவனங்களுக்கே வழங்கப்படும். மின்சார சங்கத்தினர் முன்வைத்துள்ள ஒருசில கோரிக்கைகள் நியாயமற்றவை அவற்றை ஏற்க முடியாது என்றார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பால் கட்டப்பட்ட சிறப்பு மகளிர் சிகிச்சை நிலையமானது பல ஆண்டுகளாக இயங்காமல் இருக்கின்றது. இதனை நாங்கள் சென்று பார்த்தோம். அங்கே இலங்கையில் எங்கும் இல்லாத ஸ்கேன் மற்றும் கதிரியக்க இயந்திரங்கள் உள்ளபோதும். அவற்றில் சில உபகரணங்கள் காலாவதியாகியுள்ளன.


சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது. அதன்போது வடமாகாணத்தில் சுழற்சி முறையில் ஆளணிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறப்பட்டது. சுகாதார அமைச்சர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் அவதானம் செலுத்தி நீண்ட காலமாக இயங்காமல் இருக்கும் வைத்தியசாலைகளை உடனடியாக இயக்கவும், ஆளணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டக் கர்ப்பிணிகள் உள்ளிட்ட பெண்கள் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:

இந்தப் பிரச்சினை உண்மையானதே. அங்கே கட்டடங்கள், உபகரணங்கள் இருந்தாலும் ஆளணி போதுமானதாக இல்லை. இலங்கைக்கு வரும் விசேட வைத்தியர்களை அங்கு அனுப்பினாலும் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருப்பது தொடர்பிலும் பிரச்சினைகள் உள்ளன.

எவ்வாறாயினும் நிறைவுகாண் ஊழியர்களை நாங்கள் பயிற்றுவித்து வருகின்றோம். இதனூடாக அங்கு ஆளணியை பூர்த்திசெய்ய முடியுமென்று நினைக்கின்றேன். கிளிநொச்சி வைத்தியசாலை தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். அங்குள்ள குறைபாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# தமிழ் மக்களின் கையொப்பங்கள் ஐ.நா. பிரதிநிதியிடம் கையளிப்பு



தமிழர்களுக்கான நீதி, செம்மணிப் புதைகுழி விடயத்தில் பன்னாட்டுத் தலையீடு ஆகியவற்றை ஐ.நா. பெற்றுத் தர வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தமிழ்மக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய கடிதம் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிரான்சேயிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையெழுத்துச் சேகரிப்பிற்கு தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியப் பேரவை ஆகியனவும் ஆதரவு தெரிவித்திருந்தன. சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதம் நேற்றுப் பிற்பகல் 3:30 மணியளவில் கொழும்பில் உள்ள ஐநா அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடனான சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும், சமத்துவக் கட்சியின் செயலாளர் நாயகம். சந்திரகுமாரும் ரெலோவின் நிதிச்செயலாளர் சுரேந்திரனும் கலந்துகொண்டனர்.

ஐநா மனித உரிமைகள் உயராணையருக்கு எழுதப்பட்டு ஐநா செயலாளர் நாயகத்துக்கும் பாதுகாப்புச் சபைக்கும் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதி செய்யப்பட்டுள்ள இக் கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் நீதியரசர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ரெலோ சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சமத்துவக் கட்சி சார்பில் சந்திரகுமார் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் நவீந்திரா (வேந்தன்) ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# என்.பி.பி. இன்றேல் தங்காலைச் சந்தையில் போதைப் பெருட்கள் விற்கப்பட்டிருக்குமாம்

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்புஆட்சிக்குவராமலிருந்திருந்தால் தங்காலை பகுதியில் வாராந்த சந்தையில் போதைப்பொருள் விற்பனை செய்யும் நிலைஏற்பட்டிருக்கும். போதைப்பொருள் கைப்பற்றப்படும் போது ஒரு அரசியல் கட்சி மாத்திரமே ஊடக சந்திப்பை நடத்தி ஆளும்தரப்பின் செயற்பாட்டை விமர்சிக்கிறது கலக்கமடைய வேண்டாம் உண்மை வெகுவிரைவில் வெளிவரும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் கைப்பற்றப்படுகின்றமைபற்றிமாறுப்பட்ட கருத்துக்கள்தற்போதுகுறிப்பிடப்படுகின்றன. கடந்த காலங்களில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அதனுடனான கைது குறித்துவிசேட கவனம்செலுத்த வேண்டும். போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய அரசியல்வாதியை கைது செய்வதற்கு பொலிஸார் செல்கையில் நாட்டின் அரசுத் தலைவர் அவ்விடத்துக்கு சென்று அந்த அரசியல்வாதியை கட்டித்தழுவியுள்ளார். இவ்வாறான நிலை தற்போது இல்லை.

பாதாளக் குழுக்கள் அல்லது போதைப்பொருள் வியாபாரிகள் கைது செய்யப்படும் போது ஆளும்தரப்பின் உறுப்பினர்கள் எவரும் அவர்களை பாதுகாப்பதற்கு முன்னிலையாகுவதில்லை. ஏனெனில் அவ்வாறான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய எவரும் ஆளும் தரப்பில் இல்லை.

நாட்டில் என்றுமில்லாத வகையில் தற்போது போதைப்பொருள் தொகை கணக்கில் கண்டுப்பிடிக்கப்படும் போது ஒரு அரசியல்கட்சி மாத்திரம் போதைப்பொருள் கைப்பற்றல் மற்றும் பாதாள குழுக்கள் கைதுக்கு எதிராக ஊடக சந்திப்பை நடத்துகிறது. ஏனைய எதிர்க்கட்சிகள் ஏதும் அவ்வாறு செயற்படவில்லை. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வராமலிருந்திருந்தால் தங்காலையில் வாராந்த சந்தையில் போதைப்பொருள் விற்கும் நிலை ஏற்பட்டிருக்கும்.

கைப்பற்றப்படும் போதைப்பொருள் தொடர்பில் தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே ஊடக சந்திப்பை நடத்துபவர்கள் கலக்கமடைய வேண்டாம் உண்மை வெகுவிரைவில் வெளிப்படும் என்பதை மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்கிறேன். போதைப்பொருளை இல்லாதொழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

தமது எதிர்கால அரசியலை வளப்படுத்திக் கொள்வதற்காக நாட்டின் எதிர்கால தலைமுறையினரின் வாழ்க்கையை இல்லாதொழிக்க வேண்டாம் என்று போதைப்பொருளுக்கு சார்பாக ஊடக சந்திப்பை நடத்தும் அரசியல் கட்சியிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# யாழ். பல்லைக்கழகத்திற்கு புதிதாக 5 மாடிக் கட்டம்

## அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள் மற்றும் கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஐந்து மாடிக் கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 2,234 மில்லியன் ரூபாவாகும் என்று அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. 2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதன்படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல் மற்றும் தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத்துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தாலும், நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதன் காரணமாக, பீடத்திற்கு மோசமான உட்கட்டமைப்பு வசதிப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக, விரிவுரை மண்டபங்கள், ஆய்வகம், ஆய்வுக்கட்டுரை அறை, பரீட்சை மண்டபம் மற்றும் கேட்போர் கூடம் ஆகிய வசதிகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் மாணவர்களுக்கு சிறந்த கல்விச் சூழலை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# முல்லைத்தீவு அதிபர்கள் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானம்

## கல்விப் பிரதிநி அமைச்சர் வாக்குறுதி

மிகைஊழியர்அடிப்படையில்அதிபர்சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள்சேவையாப்புக்கு அமைவாக இணைத்துக்கொள்ளப்படாமையினால் அவர்களுக்கான இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளைவழங்குவதில்சிக்கல்கள்நிலவுவதாகவும், இது தொடர்பில் கல்வி ஆலோசனை குழுவில் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, வடக்கு மாகாணத்தில் மிகை ஊழியர் அடிப்படையில் அதிபர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களின்பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தால்எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் தனது கேள்வியில் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் மிகவும் மோசமான கல்விச் சூழல் நிலவிய நிலையில், எமது மாகாணத்தில் அதிபர்கள் தேவையென 2012ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. 10 வருடங்களின் பின்னர் அவர்கள் நிரந்தர அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஏனைய அதிபர்களுக்கு வழங்கப்படும்அதேஉரித்துக்கள்இந்தஅதிபர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

குறிப்பாக பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அந்தக் கொடுப்பனவுகள் 2018ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்ட பின்னர் அவை நிறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பான சுற்றறிக்கைகளில்திருத்தங்களைச்செய்யவேண்டும். அவர்கள் 2012 முதல் இடமாற்றமின்றி ஒரே பாடசாலைகளில் இருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு இந்த ஆளும்தரப்பில் தீர்வு வழங்கப்படுமா? எனக் கேட்கிறேன் என்றார்.

பிரதி அமைச்சர் மதுர செனவிரட்ன தனது பதிலில் தெரிவித்ததாவது:

இந்த விடயம் தொடர்பில் நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சு நடத்தியுள்ளோம். சேவை யாப்புக்கு அமைய சேர்த்துக்கொள்ளாமையே அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. இதனால் ஆசியர்களுக்கு அதிபர் சேவையுடன் அந்த பாடசாலையிலேயே இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சேவை யாப்புக்கு அமைய சேர்த்துக்கொண்டிருந்தால் அதற்கமைய இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகளை செய்ய முடியுமாக இருந்திருக்கும்.

மேலதிக கொடுப்பனவு மற்றும் இடமாற்றங்கள் என்பவற்றையும் ஏனைய அதிபர்களுக்கு போன்று செயற்படுத்த முடியாது. எவ்வாறாயினும் சகல சேவைகள் தொடர்பான கல்விப் பேரவை அமைக்கப்பட்ட பின்னர் இந்தக் குழுவினர் தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்போம் என்றார்.

இவ்வேளையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் மேலதிக கேள்வியெழுப்பி தெரிவித்ததாவது:

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாகும். அங்கு 12 வருடங்களாக பணியாற்றிய ஆனந்தராஜா என்பவரைத் திடீரென நிறுத்தி அங்கு இன்னுமொருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் கொழும்பில், கல்வி அமைச்சில் இதற்கு தகுதியாக தமிழ் உத்தியோகத்தர் இல்லை. குறிப்பிட்ட பாடசாலையில் அதிபர் தரம் ஒன்றில் 12 வருடங்களாக அதிபராகப் பணியாற்றியவர் இப்போது அங்கு ஆசிரியராக இருக்கின்றார். இது மிகப்பெரிய அநீதியாகும். இதற்கு சிறந்த தீர்வை வழங்குங்கள் என்றார்

# போதைப் பொருள் குற்ற அரசியலாளர்கள் ரணிலிடம் தஞ்சமடைவதால் பயனில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்பற்ற அரசியல்வாதிகள் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை. மாறாக அவற்றுடன் தொடர்புடையவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கவும் முடியாது. இதிலிருந்து தப்பிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவிடம் தஞ்சமடைவதும் பயனற்றது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட மூவரைக் கைது செய்வதற்கு அவர்கள் தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்புக்குச் சென்றிருந்தபோது அவர் அங்கு இருக்கவில்லை. பக்கோ சமனின் அடுக்குமாடி குடியிருப்பில் அவர்கள் மறைந்திருந்தனர். இதனால் இந்தோனேஷிய பொலிஸாருக்கு அவர்கள் அனைவரையும் ஒருமித்து கைது செய்ய முடிந்தது. அச்சத்தில் அவர்கள் ஒன்று கூடியதால்தான் அனைவரும் ஒன்றாக சிக்கினர்.

அதேபோன்றுதாம்கைது செய்யப்படுவோம்என்றஅச்சத்திலேயே சகல எதிர்க்கட்சியினரும் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். எந்தவொரு எதிர்க்கட்சியையும் ஒடுக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவில்லை. அரசியலில் ஈடுபடும் அனைவரும் இந்தக் குற்றங்களுடன் எவ்வித தொடர்பும் அற்றவர்கள் என்றால் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை.

மாறாக இவற்றுடன் ஏதேனும் அரசியல் தொடர்புகள் இருந்தால் அவர்களைச் சட்டத்தின் முன் ஒப்படைப்பதே சிறந்ததாகும். எதிர்கால சந்ததியினர் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் இவற்றுடன் தொடர்புடைய அரசியல் தலையீடுகள் தொடர்பில் வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய எந்தவொரு அரசியல்வாதிக்கும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. அதற்காக ரணில் விக்கிரமசிங்கவிடம் சென்று தஞ்சமடைவதும் பிரயோசனமற்றது என்றார்.



# தொழிற்சங்கத்தினரை அடக்க முயற்சித்தால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும்

## நாமல் ராஜபக்ச ஆளும்தரப்பிற்கு எச்சரிக்கை

தொழிற்சங்கத்தினரை பலவந்தமான அடக்க முயற்சித்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும் 1889 மற்றும் 1988 ஆம் ஆண்டு காலங்களில் செயற்பட்டதை போன்று தற்போது செயற்பட முடியாது. அரசுத் தலைவரின் ஒருவருட ஆட்சியில் நாட்டின் தேசிய விவசாயம், மற்றும் தேசிய உற்பத்தி துறை வீழ்ச்சியடைந்துள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ளது. இனியும் கடந்த கால ஆளும்தரப்பை விமர்சித்துக் கொண்டிக்க முடியாது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினீர்கள். இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா, மக்கள் பயனடைந்துள்ளார்களா ?

அரசுத் தலைவரின் ஒருவருட ஆட்சியில் நாட்டின் விவசாயம், கடற்றொழில் ஆகிய துறைகளின் வளர்ச்சி பின்னடைந்துள்ளது. அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்து மக்களுக்கு உணவளிக்கலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு ஆளும்தரப்பு செயற்படுகிறது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தவேண்டும்.

இலங்கை மின்சார சபை ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று போராட்டத்தில் ஈடுகிறார்கள். கடந்த ஆளும்தரப்பு இயற்றிய மின்சார சபை சட்டத்தை நீக்குவதாக மின்சார சேவையாளர்களுக்கு வாக்குறுதிளித்தீர்கள். அவர்களும் உங்களுக்கு ஆதரவளித்தார்கள். ஆனால் இன்று அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களையே செயற்படுத்த முனைகின்றீர்கள்.

தொழிற்சங்கத்தினரை பலவந்தமான அடக்க முயற்சித்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும் 1889 மற்றும் 1988 ஆம் ஆண்டு காலங்களில் செயற்பட்டதைப் போன்று தற்போது செயற்பட முடியாது. காலம் மாறிட்டது. என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். எதிர்க்கட்சிகள் மாற வேண்டும் என்று குறிப்பிடுவதற்கு முன்னர் ஆளும்தரப்பு மாறவேண்டும் .

அழகான நாடு செழிப்பான வாழ்க்கை என்று குறிப்பிட்டுக் கொண்டே ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. இந்த ஒருவருட காலத்தில் மக்கள் செழிப்பாகவில்லை. ஆனால் 159 உறுப்பினர்கள் மாத்திரம் செழிப்பாக உள்ளார்கள். 70 ஆண்டுகாலத்தை சாபம் என்று விமர்சித்தவர்கள். 75 ஆண்டு காலத்தில்செல்வந்தர்களாகியுள்ளமைகேள்விக்குறியாகியுள்ளது என்றார்.

# வேலைவாய்ப்பின்மையைக் குறைக்க ஆளும்தரப்பு முன்னுரிமை தரவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

தொழிலின்மையால் இளைஞர் யுவதிகள் சட்டவிரோத நடவடிக்கைகள், குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருட்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு மாறுகின்ற எண்ணிக்கையையும் அதிகரித்து வருவதால், வேலையில்லா நிலையை குறைப்பதற்கு சகல ஆளும்தரப்புகளும் முன்னுரிமை செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார் .

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27(2) இன்கீழ் கேள்விஎழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தொழிலின்மை என்பது ஒட்டுமொத்த சமூகத்திலும் போலவே பொருளாதாரத்திலும்கூட கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாக வுள்ளது . கல்வித் தகுதிகளோடு உயர்மட்ட திறன்களையும் கொண்ட இளைஞர் யுவதிகள், தொழில் இல்லாமல் இருப்பது அவர்களினது எதிர்காலத்திலும் போலவே நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக மாறியுள்ளது.

இதன் பிரகாரம் பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றேன். இவற்றுக்கு குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்கையும் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கையில் தற்போதைய வேலையின்மை விகிதம் யாது ? என்பதையும், கல்விப்பொதுத்தராதர சாதாரண தர, உயர்தர, பட்டதாரிகள் போன்ற கல்வித் தகுதிகளின்படி அதன் எண்ணிக்கையிலான பரவல் யாது என்பதையும்? வேலையின்மை சமூகத்தில் ஒரு பேரழிவை ஏற்படுத்தும் என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்கிறதா ?

வேலையில்லா நிலையைக் குறைப்பதற்கு ஆளும்தரப்பு எடுத்துள்ள குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் யாவை ? இதைக் குறைப்பது ஒட்டுமொத்த பொருளாதார இலக்காகக் கருதப்படலாம் என்பதால், 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் வேலையின்மையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் சதவீத இலக்குகள் யாவை?

தற்போதைய ஆளும்தரப்பின் 'வளமான நாடு, அழகான வாழ்க்கை' என்ற கொள்கை அறிக்கையிலும் சுமார் 40,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதாகவும், 20,000 பேரை ஆசிரியர் தொழிலுக்கும், 3,000 எஸ்.டி.ஈ எம். பட்டதாரிகள் மற்றும் 9,000 ஸ்.டி.ஈ எம் அல்லாத பட்டதாரிகள் தகவல் தொழிநுட்ப துறையிலும், மேலும் 3000 பேர் ஏனைய துறைகளிலுமாக தொழிலுக்கு உள்ளீர்க்கப்படுவர் என குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் உள்ளீர்ப்பைச் செய்ய எதிர்பார்க்கும் காலம் யாது?

இதேவேளை பிரதமரின் அறிக்கையொன்றின் படி, பட்டதாரிகள் துறையில் 50,000 தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதனால், இந்த 35,000 பேருக்கும், ஆசிரியர்களாக பணி புரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ஆசிரியர் தொழிலில் வேலை வழங்கலாம். எனவே , இந்த விடயத்தை விரைந்து மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றேன் என்றார்

# இனிமேல் கட்டாயம்

பொது பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து சாரதிகளும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பொது போக்குவரத்து சாரதி அனுமதிப்பத்திரத்தை சரியான முறையில் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுப்போம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று காதர் மஸ்தான் எம்.பி. கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து சாரதிகளும் டிசம்பர் 31க்கு முன்னர் சம்பந்தப்பட்ட பொதுப் போக்குவரத்து சாரதி அனுமதிப்பத்திரத்தை சரியான முறையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அதற்குத்தேவையானவசதிகள்செய்துகொடுக்கப்படும். அதேபோன்று பாடசாலை வாகனங்கள், காரியாலய வாகனங்கள், பஸ் வண்டிகளை பரிசோதனை செய்யுமாறு போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பரிசோதகருக்கு ஆலோசனை வழங்க இருக்கிறோம்.

எல்லயில் இடம்பெற்ற மோசமான பேருந்து விபத்தின் விசாரணை அறிக்கையை தற்போது வெளியிட்டிருக்கிறோம். அதனை யாருக்கு வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ள முடியும். இந்த விசாரணை அறிக்கையில் பல விடயங்கள் வெளிப்பட்டுள்ளன. அதனால் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்த நாங்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். குறிப்பாக மலையகப் பகுதிகளில் வளைவுப் பாதைகளில் அங்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கி இருக்கிறோம்.

அதேபோன்று அனைத்து தொடருந்து நிலையங்களிலும் விசேட தேவையுடையவர்கள் பயணிப்பதற்கு வசதி செய்து கொடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அது தொடர்பில் நாங்கள் எமது கொள்கையை நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறோம். அதன் பிரகாரம் தொடருந்து நிலையங்கள் மற்றும் பொது இடங்களுக்கு விசேட தேவையுடைவர்கள் பயணிக்க முடியுமான வசதிகளை மேற்கொள்வோம்.

அதேவேளை, 2020ஆம் ஆண்டும் 5.2 மில்லியன் வாகனங்கள் புகை வெளியேற்ற பரிசோதனை செய்துள்ளன. அதன் மூலம் மொத்த வருமானம் 3.0 பில்லியன் ரூபாவாகும். 2021இல் 5.5 மில்லியன் வாகனங்கள் புகை வெளியேற்ற பரிசோதனை செய்துள்ளன. அதன் மொத்த வருமானம் 3.2 பில்லியன் ரூபாவாகும். அதேபோன்று 2022இல் 5.5 மில்லியன் வாகனங்கள் புகை வெளியேற்ற பரிசோதனை செய்துள்ளன. அதன் மொத்த வருமானம் 3.3 பில்லியன் ரூபாவாகும். 2023இல் 5,7 மில்லியன் வாகனங்கள் புகை வெளியேற்ற பரிசோதனை செய்துள்ளன. அதன் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானம் 4.3 பில்லியன் ரூபா. 2024இல் 5.799 வாகனங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன் 4.8 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.

அத்துடன் வாகன புகை வெளியேற்ற பரிசோதனைகளின்போது அரச வாகனம் தனியார் வாகனம் எனப் பிரித்து கணக்கிடப்படுவதில்லை, பொதுவாக வாகனங்களின் எண்ணிக்கையே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2024இல் 4,565 இராணுவ வாகனங்கள் புகை வெளியேற்ற பரிசோதனை செய்யப்பட்டுள்ளன என்றார்.

# தேயிலைச் செய்கையாளர்கள் தட்டுப்பாடின்றி உரம் பெறலாம்

தேயிலைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தாமதமின்றி உரிய காலத்தில் தட்டுப்பாடில்லாமல் உரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் தேயிலை சபை மூலம் அதற்காக 2000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜந்த கம்மெத்தகே எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட கைத்தொழில் துறையில் தேயிலைப் பயிர்ச்செய்கை அண்மைக் காலமாக வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக உரம் தொடர்பான பிரச்சினையே அதற்கு காரணமாகியது. கடந்த காலங்களில் உரம் இல்லாத காரணத்தினால் முழுமையான விவசாயத் துறையும் பெரும் வீழ்ச்சிக்குள்ளானது. மேற்கொண்ட தீர்மானங்கள் உரத்தை இல்லாமல் செய்ததால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேர்ந்தது.

அந்த வகையில் தேயிலைப் பயிர்ச் செய்கையும் வீழ்ச்சியடைந்ததுடன் கடந்த வருடத்தில் அதற்காக நாம் உரம் வழங்கினோம். அதன் போது ஒரு நிறுவனத்தின் மூலம் மட்டுமே உரம் விநியோகிக்கப்படுவதாகவும் உரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும் மக்கள் மத்தியிலிருந்து பிரச்சினைகள் எழுந்தன. ஏனைய நிறுவனங்களிடமிருந்து உரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் சில தரப்பினர் யோசனைகளை முன் வைத்தனர்.

அதனையடுத்து அனைத்து யோசனைகளையும் கவனத்திற் கொண்டு உரம் விநியோகிப்பதில் புதிய முறைமை ஒன்றை உருவாக்குவதற்காக நாம் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டோம்.

அத்துடன் தேயிலை சபை மூலம் 2000 மில்லியன் ரூபாவை 2025 ஆம் ஆண்டுக்கான உர நிவாரணத்துக்காக ஒதுக்கியுள்ளோம்.

நாட்டில் நூற்றுக்கு 75 வீதமான தேயிலை, சிறு தேயிலைத் தோட்ட பயிர்ச் செய்கை மூலமாகவே பெற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த பயிர்ச்செய்கைகளை இலக்காகக் கொண்டு தேயிலை உரமானியத்தை வழங்குவதற்கு தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனை கிவ் ஆர் கோட் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிட்டிருக்கிறோம்.

அரச உரக் கூட்டுத்தாபனம், உரம் தொடர்பான தேசிய செயலகம் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள பல உர நிறுவனங்கள் மூலம் விவசாயிகள் தாராளமாக உரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அந்த வகையில் அதற்கான கிவ் ஆர் கோட் வழங்குவதை இந்த மாதம் 26ஆம் திகதி முதற் கட்டமாக களுத்துறை மத்துகம பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கும் தீர்மானித்துள்ளோம். அதன் மூலம் தேவையான காலத்தில் உரிய முறையில் விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2025இல் வெளியிடப்பெற்றது